# சட்டப் பேரவையில் தென்காசி - டாக்டர் கலை கதிரவன் பேச்சு... 7 ஆம் பக்கத் தொடர்ச்சி

**கூட்டுறவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை**

• ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், ஊத்துமலை, மாவட்ட கூட்டுறவு வங்கி அமைத்திட வேண்டும்.

**மின்சாரத் துறை**

1. தென்காசி தொகுதியில் 24 மணி நேரமும் தடையின்றி மும்முனை மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. தென்காசி ஊராட்சி ஒன்றியம், குத்துக்கல்வலசை ஊராட்சி, ராமச்சந்திர திருத்துகுளம்–ஆலங்குளம் செல்லும் கால்வாய் அருகில் மின்மாற்றி அமைத்துத்தர வேண்டும்.

3. தென்காசி ஊராட்சி ஒன்றியம், குத்துக்கல்வலசை ஊராட்சி, குத்துக்கல்வலசை ஓடைப்பிள்ளையார் கோவில் தெருவில் மின்மாற்றி அமைத்துத்தர வேண்டும்.

4. ஆலங்கும் ஊராட்சி ஒன்றியம், வீராணம் ஊராட்சி, அலியார் நகர், சதாம் உசேன் நகர், பழனிபாபா நகர், காயிதே மில்லத் நகர் பகதிகளில் அதிக திறன் கொண்ட புதிய மின்மாற்றி அமைத்துத்தரவேண்டும்.

5. ஆலங்குளம் ஊராட்சி, வீராணம் ஊராட்சி, பள்ளிவாசல் வடக்கு பகுதி, கருவந்தா செல்லும் சாலை, கால்வாய் தெரு சாலை பகுதிகளில் மின்விளக்குகள் அமைத்துத்தரவேண்டும்.

6. தென்காசி நகரம், சுபஸ்ரீ நகரில் மின்விளக்குகள் அமைத்துத்தரவேண்டும்.

7. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், பாவூர்சத்திரம், வி.ஏ.நகர் பகுதியில் உள்ள மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றித்தரவேண்டும்.

**வேளாண் துறை**

1. சுரண்டை பகுதி-1-ல் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தரவேண்டும்.

2. சுரண்டை நகராட்சி, ஜமீன் சுரண்டை சர்வே எண் 21/1-ல் அரசு உலர்களம் அமைத்துத்தரவேண்டும்.

3. வடக்கு காவலாக்குறிச்சியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

4. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், வடக்கு காலாக்குறிச்சியில் உலர்களம் அமைத்திடவேண்டும்.

5. பலபத்திரராமபுரம் ஊராட்சியில் உலர்களம் அமைக்க வேண்டும்.

6. தென்காசி மாவட்டத்தை வறட்சி பாதித்த பகுதியாக அறிவித்து விவசாயக் கடன் முழுவதும் ரத்து செய்ய வேண்டும்.

7. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், பலபத்திரராமபுரம், பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு காப்பீடு நிவாரணத் தொகை கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

**சுற்றுலாத் துறை**

1. குற்றாலத்தை இந்திய சுற்றுலா வரைபடத்தில் இணைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

2. குற்றால மலையில் சாத்தனேரிக்கு மேல் புதிய அணை கட்டப்பட வேண்டும்.

3. பழைய குற்றாலம் அருவியை மீண்டும் ஆயிரப்பேரி ஊராட்சியின் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

4. குற்றாலத்தில் பொழுதுபோக்கு பூங்காக்கள் அமைக்கவேண்டும்.

5. குற்றாலத்தில் மல்ட்டி லெவல் பார்க்கிங் வசதி ஏற்படுத்தவேண்டும்.

6. குற்றாலத்தில் மரங்கள் வெட்டுவதை தடைசெய்து, பசுமை வளைவு பகுதியாக (Green belt Area) அறிவிக்க வேண்டும்.

7. குற்றாலம் பேரூராட்சி நிர்வாகத்தால் இடிக்கப்பட்ட காட்டேஜ்களை மீண்டும் கட்டி, பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும். அரசுக்குச் சொந்தமான மெயின் அருவியில் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு இருந்த காட்டேஜ்களில் பேரூராட்சி நிர்வாகம் தனியாருக்கு ஏலத்திற்கு விடும் முறையை மாற்றி குறைந்த வாடகைக்கு விட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

8. ஐந்தருவி பழத்தோட்ட பகுதியில் அருவி பூங்காவை சீரமைத்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும்.

9. பழைய குற்றாலம் மற்றும் சிற்றருவியில் மக்கள் குளிக்கும் நேரத்தை சீசன் நேரத்தில் கூட்டவேண்டும்.

10. பேரருவி அருகில் இருக்கும் மீன் கண்காட்சியகத்தை பராமரித்து, மீண்டும் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும்.

11. குற்றாலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில்கொண்டு, குற்றலாத்தை தூய்மையாக வைத்திருக்க தூய்மைப் பணியாளர்களை நியமிக்கவேண்டும்.

12. குற்றாலத்தில் பிளாஸ்டிக் பொருட்களை முற்றிலும் தடை செய்யவேண்டும். மேலும் சிற்றாற்றில் கழிவு நீர் (சாக்கடை) கலக்காமல் மக்கள் குளிக்கும் வகையில் பாதுகாக்கவேண்டும்.

13. குற்றாலத்தில் சீசன் காலங்களில் பொதுமக்கள் நலன்கருதி அதிகாலை 4 மணி முதல் இரவு 12 மணி வரை சிறப்புப் பேருந்துகள் குற்றாலத்திற்கு செங்கோட்டை, தென்காசி, திருநெல்வேலி, மதுரை, பழைய குற்றாலம், ஐந்தருவி ஆகிய இடங்களுக்கு அதிகளவில் இயக்கப்படவேண்டும்.

**நீர்வளத் துறை**

1. குலசேகரப்பட்டி அருகில் உள்ள கடபோகத்திகுளம் முதல் பட்டிபத்து குளத்திற்கு கால்வாய் தூர்வாரி, தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

2. இரட்டைகுளத்திலிருந்து இலந்தை குளத்திற்கு நீர்வழித்தடம் செண்பக கால்வாய், சுத்தம் செய்து தடுப்பு சுவர்களை அமைத்துத் தர வேண்டும்.

3. சிற்றாறு பாசன வசதி கால்வாய்களை தூர்வாரி, குளங்களுக்கு தண்ணீர் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. வீராணம் ஊராட்சி பெரியகுளம் பாசன பகுதியை தூர்வார வேண்டும்.

5. ராஜகோபாலபேரி ஊராட்சி, அருந்தவபிராட்டி குளத்து கரையில் உள்ள சீமை கருவேல மரங்கள், தடுப்புச்சுவர் அமைத்துத் தர வேண்டும்.

6. கருப்பாநதி நீரிவழித்தடம், ஊத்துமலை வரை தூர்வாரி, பாசன குளங்கள் நிரம்பிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. பெரியகுளத்திலிருந்து காசிக்கு வாய்த்தான் குளத்திற்கு செல்லும் நீர்வழித்தடத்திலிருந்து வடக்கு காவலாக்குறிச்சி பெரியகுளத்திற்கு கால்வாய் வெட்டும் பணியில் நாச்சியார்புரம் கல்கட்டிகுளத்தையும் இணைத்துத் தர வேண்டும்.

8. பாப்பான்கால்வாயில் ஆக்கிரமிப்பை அகற்றி, தூர்வாரி தர வேண்டும்.

9. கடையநல்லூர் ஒன்றியம், குலையநேரி ஊராட்சி, குளத்திற்கு 13-ம் நம்பர் மடை கள்ளம்புளி குளத்திலிருந்து பைப் லைன் போட்டு தண்ணீர் கொண்டு வர வேண்டும்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

1. ஊத்துமலையை தலைமை இடமாக கொண்டு தனி ஊராட்சி ஒன்றியம் அமைத்துத் தர வேண்டும்.

2. கீழப்பாவூர், மேலப்பாவூர் ஊராட்சிகளில் முப்புடாதியம்மன் கோவில் கலையரங்கம் கட்டித் தர வேண்டும்.

3. கீழபாட்டாக்குறிச்சி கிராமத்தில் சமுதாய நலக்கூடம் கட்டித்தர வேண்டும்.

4. கீழப்பாவூர், இராஜகோபாலப்பேரி ஊராட்சி, அதிசயபுரம் கிராமம் வீராணம் குளம் செல்லும் கால்வாயில் பாலம் அமைத்துத் தர வேண்டும்.

5. ஆலங்குளம், வடக்கு காவலாக்குறிச்சி ஊராட்சியில் சமுதாய நலக்கூடம் கட்டித்தர வேண்டும்.

6. கீழப்பாவூர் ஒன்றியம், குலசேகரப்பட்டி ஊராட்சி, குறும்பலாபேரி கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலையரங்கம் கட்டித்தர வேண்டும்.

7. கடையநல்லூர், குலையநேரி ஊராட்சி, அம்மையாபுரம் கிராமத்தில் சமுதாய நலக்கூடம் கட்டித்தர வேண்டும்.

8. கீழப்பாவூர், கல்லூரணி ஊராட்சி, பாவூர்சத்திரம்-கொண்டலூர் தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

9. ஆலங்குளம், குறிச்சாம்பட்டி, கலையரங்கம் கட்டித் தர வேண்டும்.

10. ஆலங்குளம், குறிச்சாம்பட்டி ஊராட்சியில் கலையரங்கம், ரேசன் கடை கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

11. கல்லூரணி ஊராட்சி, மலையராபுரத்தில் பேருந்து நிறுத்த நிழற்கூரை மற்றும் மலையராபுரம்-பஞ்சபாண்டியூர் செல்லும் சாலை ஓரத்தில் தடுப்புச்சுவர் சாலையை விரிவுபடுத்தி தர வேண்டும்.

12. கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், குலையநேரி வடக்கு தெரு, ஆசூரி முத்தம்மாள் கோவில் மைதானத்தில் சமுதாய நலக்கூடம் கட்டித்தர வேண்டும்.

13. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், கீழ வீராணம் ஊராட்சி, ஏந்தலூரில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி, சுகாதார வளாகம், சமுதாய நலக்கூடம், கலையரங்கம் கட்டித்தர வேண்டும்.

14. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், மேலமருதப்பபுரம் கிராமத்தில் சமுதாய நலக்கூடம் கட்டித்தர வேண்டும்.

15. வீரகேரளம்புதூர் தாலுகா, மேலமருதப்பபுரம் கிராமத்தில் பட்டியலின மக்களுக்கு மயான எரியூட்டும கட்டடம் கட்டித் தர வேண்டும்.

16. குத்துக்கல்வலசை ஊராட்சி, அய்யாபுரம் கிராமத்தில் இளைஞர்களுக்கு உடற்பயிற்சி கூடம் கட்டி, உபகரணங்கள் வழங்க வேண்டும்.

17. வீரகேரளம்புதூர் ஊராட்சி, தாயார் தோப்பு-வீராணம் கால்வாயில் ஜெர்சி பால்பண்ணைக்கு அருகில் பாலம் அமைத்துத் தர வேண்டும்.

18. சிவநாடானூர் ஊராட்சி, திருமலாபுரத்தில் சமுதாய நலக்கூடம் அமைத்துத் தர வேண்டும்.

19. ராமர்கோவில்-முப்புடாதி அம்மன் கோயில் வரை சாலை அமைத்துத் தர வேண்டும்.

20. மேலப்பாவூர் ஊராட்சி, குறுக்குச்சாலையில் இருந்து குறும்பலாப்பேரி செல்லும் சாலையை விரிவாக்கம் செய்து தர வேண்டும்.

21. அச்சங்குட்டம் ஊராட்சியில் 60 ஆயிரம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, அச்சங்குட்டம் முதல் லட்சுமிபுரம் மேலக்குளம் வரை சாலையில் வாறுகால் அமைத்துத் தர வேண்டும்.

22. அச்சங்குட்டம் ஊராட்சி, லட்சுமிபுரம் ராஜீவ் நகர் பகுதியில் பயணியர் நிழற்குடை அமைத்துத் தர வேண்டும்.

23. குணராமநல்லூர் ஊராட்சி, புளிச்சிக்குளத்தில் 60 ஆயிரம் லிட்டர் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர வேண்டும்.

24. முத்துமாலைபுரம் ஊராட்சி, சில்லரைப்புரவு சல்மா நகரில் சமுதாய நலக்கூடம் கட்டித்தர வேண்டும்.

25. குத்துக்கல்வலசை ஊராட்சி, அழகப்புரம், சுப்பிரமணியபுரம் பகுதியில் சமுதாய நலக்கூடம் கட்டித்தர வேண்டும்.

26. குத்துக்கல்வலசை ஊராட்சி, சுப்பிரமணியபுரம் பகுதியில் சமுதாய நலக்கூடம் கட்டித்தர வேண்டும்.

27. குத்துக்கல்வலசை ஊராட்சி, சுப்பிரமணியபுரம் பகுதியில் நியாயவிலை கடைக்குப் புதிய கட்டடம் கட்டித்தர வேண்டும்.

28. குத்துக்கல்வலசை ஊராட்சி, சுப்பிரமணியபுரம் பகுதி, மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டித்தர வேண்டும்.

29. மேலப்பாவூர் ஊராட்சி, இந்திரா நகரில் சமுதாய நலக்கூடம் கட்டித்தர வேண்டும்.

30. வீரகேரளம்புதூர் ஊராட்சி, இராமனூர் கிராமம், இராமானூர் விலக்கில் பயணியர் நிழற்குடை அமைத்துத் தர வேண்டும்.

31. தென்காசி ஊராட்சி ஒன்றியம், அங்கராயன்குளம் கிராமம், கூடுதலான அளவில் தாமிரபரணி குடிநீர் ஒதுக்கீடு செய்து தர வேண்டும்.

32. ஆவுடையானூர் ஊராட்சி, மாடகண்ணுபட்டி-பொடியனூர் சாலையை சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

33. சுரண்டை நகராட்சி, கீழச்சுரண்டை, வாடியூர் ரோடு முதல் மேற்கே ஓடை வரை வாறுகால் வசதியுடன் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

34. தென்காசி ஊராட்சி ஒன்றியம், அய்யாபுரத்தில் பேருந்து நிழற்குடை அமைத்துத் தர வேண்டும்.

35. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், அச்சங்குட்டம் ஊராட்சி, லட்சுமிபுரம் அம்மன் கோவில் தெரு, கிராம நிர்வாக அலுவலகம் மேல்புறம், யோவநாடார் கோவில் தெரு, மற்றும் காமராஜர் நகரில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

36. தென்காசி ஊராட்சி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, அம்பேத்கர் நகரில் சிமெண்ட் தளம் அமைத்துத் தர வேண்டும்.

37. தென்காசி ஊராட்சி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, நடுநிலைப் பள்ளி அருகே நூலக கட்டடம் கட்டித்தர வேண்டும்.

38. தென்காசி ஊராட்சி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, அம்பேத்கர் நகரில் கலையரங்கம் அமைத்துத் தர வேண்டும்.

39. பாட்டாக்குறிச்சி ஊராட்சி, கீழபாட்டாக்குறிச்சி இணைப்பு சாலையில் வாறுகால் அமைத்துத் தர வேண்டும்.

40. பாட்டாக்குறிச்சி ஊராட்சி, மேல பாட்டாக்குறிச்சி, பொது சுகாதார வளாகக் கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

41. பாட்டாக்குறிச்சி ஊராட்சி, கீழபாட்டாக்குறிச்சி, சமுதாய நலக்கூடம் அமைத்துத் தர வேண்டும்.

42. பாட்டாக்குறிச்சி ஊராட்சி, மேல பாட்டாக்குறிச்சியில் பொது சுகாதார வளாக கட்டடம் கட்டித் தர வேண்டும்.

43. பாட்டாக்குறிச்சி ஊராட்சி, திருச்சிற்றம்பலம் நடுப்பகுதியில் வணிக வளாக கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

44. சில்லரைப்புரவு ஊராட்சி, சம்மன் குளத்திலிருந்து சில்லரைப்புரவு வரை புதிய பைப் லைன் அமைத்துத் தர வேண்டும்.

45. முத்துமாலைபுரம், ராமர் கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

46. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், வடக்கு காவலாக்குறிச்சி, சிதிலமடைந்த சாலைகளை புதுப்பித்துத் தர வேண்டும்.

47. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், வடக்கு காவலாக்குறிச்சி, மயான கரைக்கு செல்லும் சாலையில் சிமெண்ட் தளம் அமைத்துத் தர வேண்டும்.

48. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், வடக்கு காவலாக்குறிச்சி, குளக்கரையில் தடுப்புச்சுவர் அமைத்துத் தர வேண்டும்.

49. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், பலபத்திரராமபுரம் ஊராட்சியில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

50. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், பலபத்திரராமபுரம் முதல் மருதத்தாள்புரம் வரை குளத்துகரையில் தடுப்புச்சுவர் அமைத்துத் தர வேண்டும்.

51. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், இராஜபாண்டி ஊராட்சியில் பாலம் கட்டித் தர வேண்டும்.

52. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், இனாம் வெள்ளகால் ஊராட்சியில் சமுதாய நலக்கூடம் அமைத்துத் தர வேண்டும்.

53. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், இனாம் வெள்ளகால் ஊராட்சியில் பழுதடைந்த ரேசன் கடை பராமரிப்பு செய்து தர வேண்டும்.

54. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், வீரகேரளம்புதூர் வேதக்கோயில் தெருவில் வாறுகால் வசதியுடன் பேவர் பிளாக் சாலை அமைத்துத் தர வேண்டும்.

55. வீரகேரளம்புதூர் வடக்கு பேருந்து நிலையத்தில் பயணிகள் நிழற்குடை, சேனைத்தலைவர் மண்டபத்திற்கு புதிய பாலம் அமைத்துத் தர வேண்டும்.

56. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், கலிங்கபட்டியில் மாடசாமி கோவில் தெரு, அம்மன்கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

57. இடையார்தவணை ஊராட்சியில் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் நீர்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

58. இராஜகோபாலபேரி ஊராட்சி, அதிசயபுரம், ஆர்.சி. சர்ச் தெரு, வாறுகாலுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

59. மேலராஜகோபாலபேரி அருள்மிகு முப்பிடாதி அம்மன் கோயில் அருகில் கலையரங்கம் அமைத்துத் தர வேண்டும்.

60. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குறும்பலாப்பேரியில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

61. காமராஜர் சாலையை மேலப்பாவூர் வரை விரிவுபடுத்தி தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

62. சிவசைலனூர் ஊராட்சியில், 30 ஆயிரம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

63. கல்லறைத் தோட்டத்திற்கு செல்லும் பாதையில் புதிய தார்ச்சாலை அமைத்துத் தர வேண்டும்.

64. கடையநல்லூர் ஊராட்சி, அம்மையாபுரத்தில், நியாயவிலைக்கடை அமைத்துத் தர வேண்டும்.

65. கடையநல்லூர் ஊராட்சி, அம்மையாபுரம் வழிவிடும் விநாயகர் கோயில் அருகே உயர் கோபுர மின் விளக்கு அமைத்துத் தர வேண்டும்.

66. கடையநல்லூர் ஊராட்சி, வடபுறம் வீரமாமடன் கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

67. கடையநல்லூர் ஊராட்சி, திரிகூட பகுதியில் இருந்து கிழக்காக செல்லும் வழிதடத்தை அம்மையாபுரம் ரோட்டில் இணைத்துத் தர வேண்டும்.

68. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், பலபத்திரராமபுரம் ஊராட்சியில் புதிய ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டித்தர வேண்டும்.

69. குலசேகரப்பட்டி ஊராட்சி, சந்தோஷ் நகரில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

70. ஆலங்குளம் ஊராட்சி, வீராணம் ஊராட்சியில் ஒரு வழிப்பாதையை இருவழிபாதையாக மாற்றி அமைத்துத் தர வேண்டும்.

71. வீராணம் ஊராட்சியில், பள்ளிவாசல் முன்பு பேவர் பிளாக் அமைத்துத் தர வேண்டும்.

72. வீராணம் ஊராட்சி, தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

73. வீராணம் ஊராட்சி, கிணற்றுத் தெரு மற்றும் முஸ்லிம் வடக்கு தெரு, போர் மற்றும் மின் மோட்டார் அமைத்துத் தர வேண்டும்.

74. வீராணம் ஊராட்சி, ஷட்டர் பாலம் அமைத்துத் தர வேண்டும்.

75. ஆலங்குளம் ஊராட்சி, மருக்காலங்குளத்தில் பால் உற்பத்தியாளர்கள் சங்க புதிய கட்டடம் கட்டித்தர வேண்டும்.

76. ஆலங்குளம் ஊராட்சி, பலபத்திரராமபுரம் கிராமம், ஈஸ்வரன் கோயில் தெரு மற்றும் பிள்ளையார் கோயில் மேல்புறம், மருதாத்தாள்புரம் அருந்ததியர் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

77. ஆலங்குளம் ஊராட்சி, பலபத்திரராமபுரம் ஊராட்சி, கங்கணாகிணறு தெற்கு மற்றும் வடக்கு கிராமம் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

78. ஆலங்குளம் ஊராட்சி, பலபத்திரராமபுரம் ஊராட்சி, மருக்காலங்குளம் கிராமத்திற்கு அங்கன்வாடி கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

79. மருக்காலங்குளம் கிராமம் மெயின்ரோட்டிலிருந்து வடபக்கம் தெருவிற்கு செல்ல பாலம், தங்கம்மாள்புரம் கிராமம், பிள்ளையார் கோயில் தெரு, சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

80. ஆலங்குளம் ஊராட்சி, பலபத்திரராமபுரம் ஊராட்சி, சீவலசமுத்திரம் கிராமம், யாதவர் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

81. குறும்பலாப்பேரி கிராமம், 2 இலட்சம் லிட்டர் மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

82. குறும்பலாப்பேரி விலக்கில், காமராஜர் சாலையை மேலப்பாவூர் வரை விரிவுபடுத்தி, தார்ச்சாலை அமைத்துத் தர வேண்டும்.

83. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், பாவூர்சத்திரம் பேருந்து நிலையத்தை ஸ்மார்ட் பேருந்து நிலையமும், அருகில் உள்ள நடராஜனார் சாலையை, கருப்பசாமி கோயில் வரை விரிவுபடுத்தி தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

84. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், கடபோகத்திகுளம் மறுகாலிலிருந்து பட்டிபத்து குளத்தைவரை ஆழப்படுத்தி, இருபுறமும் கரை அமைத்துத் தர வேண்டும்.

85. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குறும்பலாப்பேரி மயானக்கட்டடம், அதற்கு சுற்றுச்சுவர் மற்றும் பார்க்கிங் கல் அமைத்துத் தர வேண்டும்.

86. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், வேல்மயில்பட்டி, பஞ்சசாண்டியூர், மலையராமபுரம் மக்களுக்கு சமுதாய நலக்கூடம் கட்டித்தர வேண்டும்.

87. பஞ்சபாண்டியூர் காளியம்மன் கோயில் திடலில் கலையரங்கம் கட்டித்தர வேண்டும்.

88. மலையாராமபுரம் செல்லும் சாலைக்கு தென்புறமாக 25 அடி ஓடையில் தடுப்புச்சுவர் கட்டித் தர வேண்டும்.

89. தென்காசி ஊராட்சி ஒன்றியம், சுந்தரபாண்டியபுரம், அரசு மேல்நிலைப் பள்ளி, கொடியேற்றும் திடல் முன் பேவர் பிளாக் தளம் அமைத்துத்தர வேண்டும்.

90. தென்காசி ஊராட்சி ஒன்றியம், சுந்தரபாண்டியபுரம், அரசு மேல்நிலைப் பள்ளி, சைக்கிள் ஸ்டாண்ட் அமைத்துத் தர வேண்டும்.

91. சுந்தரபாண்டியபுரம் தென்புறம் துணை சுகாதார நிலையம் அருகே கலையரங்கம் அமைத்துத் தர வேண்டும்.

92. சுந்தரபாண்டியபுரம் பெரியகுளம் கிணறு முதல் மந்தை குடிநீர் நீர்த்தேக்க தொட்டி, சிற்றாற்று உரை கிணறு முதல் பேரூராட்சி குடிநீர் தொட்டி வரை பைப் லைன் அமைத்துத் தர வேண்டும்.

93. பாவூர்சத்திரம், வி.ஏ.நகர் பகுதியில் கலையரங்கம், பயணிகள் நிழற்குடை அமைத்துத் தர வேண்டும்.

94. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், நாச்சியார்புரம் வடக்கு தெரு மற்றும் தென்வடல் தெருவிற்கு பேவர் பிளாக் சாலை, பத்திரகாளியம்மன் கோயில் முன் சிமெண்ட் தளம் அமைத்துத் தர வேண்டும்.

95. நாச்சியார்புரம் கிராமத்தில் 30 ஆயிரம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

96. நாச்சியார்புரம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சுற்றுச்சுவர் மீண்டும் அமைத்துத் தர வேண்டும்.

97. நாச்சியார்புரம் கிராமத்தில் சமுதாய நலக்கூடம் அமைத்துத் தர வேண்டும்.

98. நாச்சியார்புரம் கிராமத்தில், கல்கட்டிகுளம் உட்புறம் தடுப்புச்சுவர், மயான பாதையில் மின் விளக்கு, தண்ணீர் வசதி, ஆழ்குழாய் கிணறு அமைத்துத் தர வேண்டும்.

99. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், அரியப்பபுரம் ஊராட்சி, திரவியநகரில் கீழ் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

100. பள்ளிக்கு செல்லும் பாதையில் தென்புறமாக குளக்கரை ஓரமாக கிழக்காக மெயின் ரோடு வரை தார்சாலை அமைத்து தர வேண்டும்.

101. அரியப்புரம் ஊராட்சி, வெள்ளப் பனையேறிபட்டில் நன்மைகூடமும், சீத்தாராமன் பட்டியில் அங்கான்வாடி மையம் அமைத்துத் தர வேண்டும்.

102. அரியப்புரம் ஊராட்சி, ரயில்வே கேட்டில் இருந்து தெற்காக ரயில்வே இடம் ஓரமாக புதிய பாதை சபரி நகர் வரை அமைத்துத் தர வேண்டும்.

103. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், இராஜகோபாலபேரி, செட்டியார் தெருவிலிருந்து அருந்ததியர் தெரு வழியாக காந்தி நகர் செல்லும் சாலையை சீரமைத்துத் தர வேண்டும்.

104. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், பரன்குன்றாபுரம் கிராமத்தில் தென்வடல் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

105. அச்சன்குன்றம் ஊராட்சி, லட்சுமிபுரம் கிராமம் அம்மன்கோயில் தெரு, சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

106. ருக்மணியம்மாள்புரம், ஆதிதிராவிடர் மக்கள் மயான கூடத்திற்கு சாலை அமைத்துத் தர வேண்டும்.

107. கீழக்கலங்கல் ஊராட்சி, 1-வது வார்டு வேதக்கோயில் தெரு, கோகுலம் நகர் தெரு, கருவந்தா ஊராட்சி, வி.என்.டி. உயர்நிலைப்பள்ளிக்கு செல்லும் சாலையை சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

108. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், ஊத்துமலை ஊராட்சி, பவுண்ட் தொழு தெரு, பாரதி நகர், இந்திரா நகர் பகுதிகளில் சாலை அமைத்துத் தர வேண்டும்.

109. ஊத்துமலை ஊராட்சி, பாரதி நகர், இந்திரா நகர், கீழக்கலங்கல் ஊராட்சி, பெரிய பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும்.

110. கீழக்கலங்கல் ஊராட்சி, முடியப்பன் ஆசிரியர் தெரு மற்றும் மாதாகோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

111. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், ஊத்துமலை ஊராட்சி, குட்டம் தெருவில் குடிநீர் இணைப்புகளுக்காக புதிய சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

112. கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், குலையநேரி ஊராட்சி, குலையநேரிக்கு தென்புறம் பாலம் அமைத்து, சுரண்டை சாலையின் மேல்புறம் உள்ள வீடுகளுக்குச் செல்ல புதிய சாலை அமைத்துத் தர வேண்டும்.

113. ஆனைகுளம் ஊராட்சி, அருணாசலபுரம் கிராமத்தில் நடுத்தெரு, கிழமேல் மற்றும் தென்வடல் தெரு, குறிஞ்சாம்பட்டி ஊராட்சி, வேதக்கோயில் தெருவரை சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

114. இராஜகோபலாபேரி ஊராட்சி, கலிங்கப்பட்டி மாடசாமி கோயில் கீழ்பகுதி, வாறுகால் வசதியுடன் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

115. குலசேகரப்பட்டி ஊராட்சி, குறும்பலாப்பேரி, வார்டு 6-ல், கருவந்தா ஊராட்சி, சோலைசேரி இந்திரா காலனி, சாலைகள் அமைத்துத் தர வேண்டும்.

116. கருவந்தா ஊராட்சி சோலைசேரி இந்திரா காலனி, ஆழ்துளைக் கிணறு செயல்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்.

117. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், ஊத்துமலை சாலையில் மின்விளக்குகள் அமைத்துத் தர வேண்டும்.

118. ஜே.ஜே. நகர் பகுதி செல்லும் பாதையில் ஓடையில் குழாய் பாலம் அமைத்துத் தர வேண்டும்.

119. வாடியூர் ஊராட்சி, கீழத்தெரு, மாரியதாய்புரம் நடுத்தெரு, மருதுபுரம் கீழத் தெரு, பரங்குன்றாபுரம் வடக்கு, பரங்குன்றாபுரம் காலனி தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

120. வாடியூர் ஊராட்சி, பரங்குன்றாபுரத்தில் புதிய அங்கான்வாடி கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

121. வாடியூர் ஊராட்சி, மாரியதாய்புரம் குளத்தில் திறந்தவெளி கிணறு அமைத்துத் தர வேண்டும்.

122. வாடியூர் ஊராட்சியில், ஒரு இலட்சம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

123. மரியதாய்புரம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

124. இராஜகோபாலபேரி ஊராட்சி, மேலராஜகோபாலப்பேரி, காந்தி நகர், அருந்ததியர் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

125. தென்காசி ஊராட்சி ஒன்றியம், ஆயிரப்பேரியில் சித்தா மருத்துவக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

126. தென்காசியில் செண்டு தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும்.

127. தென்காசி ஊராட்சி ஒன்றியம், பாட்டப்பத்து பஞ்சாயத்து, சுகாதார வளாகம் அமைத்துத் தர வேண்டும்.

128. தென்காசி ஊராட்சி ஒன்றியம், பாட்டப்பத்து பஞ்சாயத்து ஊராட்சி, தனியாக நியாயவிலை கடை அமைத்துத் தர வேண்டும்.

129. தென்காசி நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்துத் தர வேண்டும்.

130. தென்காசி நகரம், வாய்க்காபாலம் அருகே ரவுண்டானா அமைத்துத் தர வேண்டும்.

131. கீழப்புலியூரில் புறக்காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

132. சுந்தரபாண்டியபுரம் மண்பாண்ட தொழிலாளர்களுக்கு இலந்தைகுளம், மேலக்குளம் இரண்டு குளங்களிலிருந்தும் மண் எடுக்க அனுமதி வேண்டும்.

133. தென்காசி நகரம் காய்கனி சந்தையின் கடைகளுக்கு இடையே இருக்கும் சுவற்றினை அகற்ற வேண்டும்.

134. குற்றாலத்தில் பெருந்தலைவர் காமராஜர் திருவுருவச் சிலை அமைத்துத் தர வேண்டும்.

135. தென்காசி தொகுதி, நாடார் சமுதாய மக்களுக்கு பாத்தியப்பட்ட, திருக்கோவில்கள், வணிக வளாகங்கள் ஆகியவற்றில் காமராஜர் சிலை நிறுவுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

136. தென்காசி தொகுதி, கொடைவிழா மற்றும் திருவிழா 12 மணி வரை நடத்த அனுமதிக்க வேண்டும்.

137. தென்காசி தொகுதி, சுரண்டை நகரம், 22-வது வார்டு, கூத்தனார் 9-வது தெருவில் வாறுகாலுடன் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

138. தென்காசி தொகுதி, சுரண்டை நகரம், 9வது வார்டு, அண்ணா நகரில், சத்துணவு மையம், தார்ச்சாலை, உயர்நிலை நீர்த்தேக்க தொட்டி, முகப்பில் உயர்கோபுர மின் விளக்கு அமைத்துத் தர வேண்டும்.

139. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், பாவூர்சத்திரம் த.பி.சொ. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பேவர் பிளாக் சாலை அமைத்துத் தர வேண்டும்.

140. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், பாவூர்சத்திரம் த.பி.சொ. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் அலுவலகம், முகப்பு கட்டடத்தை சீரமைத்துத் தர வேண்டும்.

141. சுந்தரபாண்டியபுரம் குளத்தில் மதகு முதல் நொண்டி பாலம் தடுப்பு சுவர் அமைத்துத் தர வேண்டும்.

142. சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி, காலனி தெருவில், மேட்டுக் காலனியில் உயர்மட்ட பாலம் அமைத்துத் தர வேண்டும்.

143. சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி, காலனி தெரு, தென்காசி மெயின் ரோடு முதல் சாலைத்தெரு வழியாக பேருந்து நிலையம் வரை தார்ச்சாலை அமைத்துத் தர வேண்டும்.

144. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், கல்லூரணி ஊராட்சி, பனையடிப்பட்டி கிராமம், மற்றும் வேல்மயில்நாடார்பட்டி கிராமம், மாடிதிருக்காவுடைய நாடார்பட்டி கிராமம், மாடநாடானூர் கிராமம், பழுதடைந்த வாறுகால்களை சீரமைத்துத் தர வேண்டும்.

145. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், பலபத்திரராமபுரம் ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் சுகாதார வளாகம் அமைத்துத் தர வேண்டும்.

146. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், கீழக்கல்கல் ஊராட்சி, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டும்.

**போக்குவரத்துத் துறை**

1. சிவநாடானூர் ஊராட்சி, திருமலாபுரத்திற்கு அரசு பேருந்து இயக்க வேண்டும்.

2. தென்காசி--சங்கரன்கோவில் மற்றும் புளியங்குடி--அம்பாசமுத்திரம் பேருந்துகளை மீண்டும் அதே வழித்தடங்களில் இயக்க வேண்டும்.

3. தென்காசி ஊராட்சி ஒன்றியம், சுந்தரபாண்டியபுரம்-பாவூர்சத்திரம் வழித்தடத்தில் பேருந்து இயக்க வேண்டும்.

இவ்வாறு - சட்டப்பேரவையில் டாக்டர் கலை கதிரவன் பேசினார்.